# சுண்ணாம்புக் கரடு

**சுண்ணக்கரடு** (*Karst*) சுண்ணக்கல், தொலமைற்று, ஜிப்சம் போன்ற நீரில் கரையக்கூடிய பாறைகளால் உருவான நிலவமைப்பாகும். இத்தகைய நிலவமைப்பில் நிலத்தடி கால்வாய்களும் புதைகுழிகளும் குகைகளும் காணப்படுகின்றன.[1]

சரியான வானிலை யமைந்தால் படிகப்பாறை போன்ற வானிலை தாங்கும் பாறைகளிலும் உருவாவது ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.[2] நிலத்தடி வடிகால்கள் இருப்பதால் மேற்புறத்தில் ஆறுகள், ஏரிகள் போன்ற நீர்நிலைகள் குறைவாக இருக்கும்.



*A karst landscape in Minerve, Hérault, பிரான்சு*



*இசுகோஞன் குகைகள், சுலோவீனியா*



*புயர்ட்டோ பிரின்செசா நிலத்தடி ஆறு, பிலிப்பீன்சு*



உலகளவில் காபனேற்றுப் பாறைகளின் பரவல் (முதன்மையாக சுண்ணக்கல்,

உலர்கனிமங்கள் தவிர்த்து)



அயர்லாந்தின் மேற்கு கடலோர புரென் சுண்ணக்கரடுகள்



*டோர்கல் டெ அன்டெகுய்ரா, அந்தாலூசியா, எசுப்பானியா*



*கலாங் விரிகுடா, வியட்நாம்*

## சுண்ணக்கல் கரடுகளைக் குறித்த ஆய்வுகள் பெட்ரோலிய

புவிப்பொதியியலில் முதனைமையாகின்றன; உலகின் எண்ணெய் சேமிப்பில் 50% வரையில் இத்தகைய நிலவமைப்புகளில் அமைந்துள்ளன.[3]